குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.11/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜு | தொழில் | |
| தந்தை பெயர் | தங்கவேல் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.44 மணி,

Complainant Govindaraju present. Advocate Mr.G.Munusamy present for Complainant. Accused Venu present. Advocate Mr.P.Soundararajan present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1) நான் தற்போது சேலம் கலெக்டேட்டில் தற்காலிகமாக ஓட்டுநர் பணியில் இருக்கிறேன் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் தினசரி ஓட்டுநர் வேலைக்கு செல்வேனா என்றால் ஆம். என்னுடைய பணிக்கு வருகை பதிவேடு உள்ளதா என்றால் ஒப்பந்த அடிப்படையிலான பணி என்பதால் வருகை பதிவேடு இல்லை. என்னுடைய மாத வருமானம் ரூ.15,000/–ம் ஆகும். நான் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்தாலும் வருகை பதிவேடு பராமரிக்கப்படும் ஆனால் நான் இல்லை என்று சொல்வதால் பணிக்கு செல்வதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் மாத வருமானம் எவ்வளவு என்றால் நிலையாக இருக்காது, நிலம் விற்பது பொறுத்து மாறுபடும். எனக்கு சுமாராக ஒரு ஆண்டுக்கு 1 1/2 முதல் 2 லட்சம் வரை வருமானம் இருக்கும். எனது வீட்டில் நான் மட்டும் தான் வருமானம் ஈட்டுகிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவியும் வேலைக்கு செல்கிறார், வட்டார வளப்பயிற்றுனராக இருக்கிறார். எனது மனைவிக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால் ஒரு பயிற்ச்சிக்கு ரூ.1000/– ம் வீதம் சுமாராக ஒரு மாதத்திற்கு ரூ.15,000/– ம் வரை சம்பாரிக்கிறார். எனது மனைவி சுமார் 10 ஆண்டு காலமாக வேலைக்கு செல்கிறார்.

3) நான் சொல்வது போல் எனது மனைவி பணி செய்யவில்லை என்றாலும் மகளீர் சுயஉதவி குழு நடத்தி வருகிறார் என்றாலும் சரியல்ல. எனது தந்தையுடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. எனது தந்தையின் சகோதரி ரங்கம்மாள் கொள்ளத் தெரு, கருப்பூரில் வசித்து வருகிறார் என்றாலும் அவர் ஆஜர் எதிரியின் பக்கத்து வீட்டுகாரர் என்றாலும் சரியல்ல. எனது அத்தை ரங்கம்மாள் வீட்டிற்கு அடிக்காடி நான் வருவதால் எனக்கு ஆஜர் எதிரி பழக்கம் என்றால் சரியல்ல. எனது அத்தை ரங்கம்மாள் சீட்டு நடத்துவார் என்றாலும் அதற்காக பிணையாக கொடுக்கப்பட்ட காசோலையை அவரிடம் இருந்து பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனது தந்தையின் சகோதரி இல்லை என்றும் தான் எந்த சமுதாயத்தை சேர்ந்தவர் என்று பொய்யாக சொல்லி எதிரியும் நானும் உறவினர்கள் இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அரசு வேலையில் இருந்து சுமார் 1 லட்சம் முதல் 1 1/2 லட்சம் சம்பளம் பெறுவதாகல் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அரசு வேலையில் இருப்பதால் அவரிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.58 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.